**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO-13/2021**

**Dated :18.04.2026**

**Deposition of witness for : P.W.4**

**Additional Witness Examined as PW4 (IO)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாலதி | வயது | : | 55 |
| கணவர் பெயர் | : | சுந்தரம் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | ஆதனக்கோட்டை | தொழில் | : | காவல் ஆய்வாளர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. அவர்களது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது))

**முதல் விசாரணை**

1) நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு முன்பு பணியில் இருந்த, உதவி ஆய்வாளர் தமிழ்வாசகன், காவல் ஆய்வாளர் ஞானவேலன் ஆகியோரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். அவர்கள் தற்போது பணி மாறுதலில் வேறு காவல் நிலையங்களில் பணியில் இருப்பதால், வழக்கு கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் தமிழ்வாசகன் கடந்த **30.03.2021** ஆம் தேதி, ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில், நிலைய பொறுப்பில் இருந்த போது, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று, அங்கு சென்று, அங்கு வழக்கு சம்பவத்தில் காயமுற்ற, சிகிச்சையில் இருந்த பெருங்களூர் பன்னிரெண்டாம்பட்டி கிராமத்தினைச் சேர்ந்த தங்கப்பா மகன் ரமேஷ் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, நிலையம் ஆஜராகி நிலைய குற்ற எண் **59/2021** இல் சட்டப்பிரிவுகள் **294(b), 324, 506(2) இதச –**ன் கீழ் வழக்கு பதிவு செய்து, கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார்.

**(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் வழக்கின் கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் ஞானவேலன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

2) காவல் ஆய்வாளர், இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 31.03.2021 ஆம் தேதி, காலை 06.30 மணியளவில் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் சுப்பிரமணியன் மற்றும் சங்கர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3) பின்னர் பட்டியல் சாட்சிகள் ரமேஷ், சுரேஷ், நடராஜன், ராமலிங்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளை விசாரித்ததில், வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில், எதிரிகள் கடந்த 08.04.2021 ஆம் தேதி மாண்புமிகு புதுக்கோட்டை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கு.ப.மனு எண் 1378/2021 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரணடைந்து, உரிய பிணையில் வெளிவந்தது தெரியவந்ததால் அவர்களை வழக்கில் கைது செய்யவில்லை.

4) பின்னர், 13.07.2021 ஆம் தேதி புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று அ.சா.1 -க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ராஜேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அ.சா.1 -க்கான விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வந்துள்ளார். **( மேற்படி விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று முறையே அ.சா.ஆ5 மற்றும் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

5) பின்னர், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் தமிழ்வாசகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் இந்த விசாரணையை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் **294(b), 324, 506(2) இதச** -இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் நான் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும், காவல் ஆய்வாளர் சம்பவ இடம்

சென்று, சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தையும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து, எதிரிகளுக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.04.18 17:05:02 +0530

**என். சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**